Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 35

National Tamil Daily தேசிய தினசரி

குரோதி பங்குனி 2 துல்கஃபிறை 11 (15-3-65) திங்கட்கிழமை

# "அணுவல்லரசாக சீனு இன்னும் மாறவில்லை

## சீன சவாலை சமாளிக்க முடியும்"

— சாஸ்திரி

புதுடில்லி, மார்ச் 15

"கம்யூனிஸ்ட் சீனுவின் சவாலை தைரியமாகச் சமாளிக்க இந்திய மக்கள் முன் வரவேண்டும்" என்று இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

சீனு அணுகுண்டை வெடித்ததால் இந்தியா அஞ்சவில்லை என்று கூறிய திரு. சாஸ்திரி, அணுசக்தி ஆக்க வேலைகளுக்கு மட்டுமே பயன் படுத்தப் படும் என்ற இந்தியாவின் கொள்கையில் மாற்றம் இருக்காது என்றும் தெரிவித்தார்.

அணுகுண்டை வெடித்ததன் மூலம் சீனு உண்மையான அணு வல்லரசாக மாறிவிடவில்லை என்றும் பிரதமர் சாஸ்திரி குறிப்பிட்டார்.

# பஸ்

யாழ்ப்பாணத்திலிருந்து சில பகுதிகளுக்கு "டபிள் டெக்கர்" எனப்படும் இரட்டைத் தட்டு பஸ்கள் ஓடுவது இப்பொழுது பலர் அறிந்த விஷயம். 'இந்த' கொழும்பு பாக்கியம் எமக்குக் கிடைக்குமா என்று எண்ணியவர்கள் அதிசயிக்க, இங்கு அவை எப்படித்தான் ஓடமுடியும் என்று வேறு பல சிந்தித்திருக்கும் தருணத்தில் அவை இங்கு வந்திறங்கின. கொழும்பைத் தவிர்ந்த ஏனைய வெளியூர்களுக்குக் கிடைக்காத இந்தப் பாக்கியம் யாழ்ப்பாணமக்களுக்குக் கிடைத்தது!

"டபிள் டெக்கர்" பஸ்கள் வந்தன. சேவையில் ஈடுபட்டன. பொதுமக்களும் ஏறிப் பழகினர்கள். பின்னர் விரும்பிப் பிரயாணம்செய்தனர். இரட்டைத்தட்டு பஸ்ஸில் பலர் ஏறி பிரயாணம்செய்திருக்கின்றனர். இதில் இன்னும் ஏருதவர்களும் சிலர் இருக்கிருர்கள். ஆனல் நீங்கள் இவற்றில் பிரயாணம் செய்திருந்தால், எப்படி ஏறினீர்கள்? எங்கு இருந்தீர்கள்? கீழே இருந்தால் எங்கு டிக்கட் எடுத்தீர்கள்? மேலே ஏறினல் எங்கு டிக்கட் பெற்றீர்கள்? கொழும்பில் ஓடும் இந்த இரட்டைத்தட்டு பஸ்ஸில் கீழே டிக்கட் எடுக்கா...

# டிக்கட்

...லும் மேலே இருக்கலாம். மேல்தட்டுக்குப் போகும்வழியில் டிக்கட்டை பெற்றுக் கொண்டு மேலேயும் இருக்கலாம், கீழேயும் இருக்கலாம். இது பிரயாணிகளின் விருப்பத்தைப்பொறுத்தது. அவர்களின் சௌகரியத்துக்கேற்றது. ஆனல்யாழ்ப்பாணத்தில்.........

பிரயாணிகளின் சௌகரியம், பஸ் கண்டக்டர்களின் சௌகரியத்தைப் பொறுத்தே இருக்கிறது. கீழே டிக்கட் எடுத்தால் கீழே இருக்கவேண்டும், மேலே ஏறினல் மேலேதான் டிக்கட் பெறவேண்டும். கீழே டிக்கட் பெற்றுக்கொண்டு இடம் இல்லாவிட்டாலும் நிற்கலாம், ஆனல் அச்சமயம் மேலே இடமிருந்தால் அங்கே போகமுடியாது. அப்படி யென்ருல் மேலேயும் ஒரு டிக்கட் பெற்றே தீரவேண்டும்.

இங்கு இரட்டைத்தட்டு பஸ்ஸில் ஏறவிரும்புகிறவர்கள், முதலில் கண்டக்டர்களின் வசதியைக் கவனித்து டிக்கட் பெறவேண்டியது முக்கியமாகவிருக்கின்றது. அப்படியென்ருல் பஸ்களில் பொதுமக்கள் பிரயாணம் செய்வது யாருக்காக?




வவுனியா மாவட்டம்

# பாதிக்கப்பட்ட பகுதிகள் திருத்தப்பட்டன

# அல்லலுற்ற மக்களுக்கு 5 கோடி மரவள்ளி தடிகள்

## நிவாரண உதவிகளை தொடர்ந்து வழங்க நடவடிக்கை

வவுனியா, ஞாயிறு

அண்மையில் ஏற்பட்ட சூருவளியினல் பாதிக்கப்பட்ட கல்மடு குடியேற்றத் திட்டம் சேமமடு குடியேற்றத் திட்டம் பாவற்குள குடியேற்றத் திட்டம் ஆகிய குடியேற்றப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு நிவாரண வேலைகள் வழங்கப்பட்டிருக்கிறது. அன்றாடச் சீவியத்தை கொண்டு நடத்த முடியாத நிலையில் இருந்த இவர்களுக்கு நிவாரண வேலைகள் வழங்கப்பட்டிருப்பதன் மூலம் ஓரளவு கஷ்டம் நீங்கியிருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குடியேற்ற வாசிகளின் நலனில் அதிக அக்கறை கொண்டுள்ள சமூகசேவைப் பகுதியினர் தொடர்ச்சியாக இவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கி வருகின்றனர். வவுனியா அரசாங்க அதிபர், பாதிக்கப்பட்ட குடியேற்ற திட்ட வாசிகளுக்கு ஐந்து கோடிக்கு மதிப்பான மரவள்ளித் தடிகளை இலவசமாக வழங்கியுள்ளனர். மேலதிகமாக மரவள்ளித் தடிகளை வழங்கவும் அவர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

சூருவளியால் பாதிக்கப்பட்ட வவுனியா மாவட்டத்தில் திருத்த வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து சகல வீடுகளும், வீதிகளும் திருத்தப்பட்டுள்ளன. போக்குவரத்து சீர்கேடுள்ள பகுதிகளைத் திருத்துவதில் போதிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்க, வவுனியா அரசாங்க அதிபரும் சமூக சேவைப் பகுதியினரும் இப்பகுதி உத்தியோகஸ்தர்களும் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

சூருவளியால் பாதிக்கப்பட்ட கோயில்களைத் திருத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# "தமிழுக்கு தொண்டுசெய்வதே எனது முழு இலட்சியம்"

வவுனியா, ஞாயிறு

"வவுனியா மக்கள் பல காலமாகக் கஷ்டமநுபவித்துள்ளனர். இம்மக்களின் வாழ்க்கையைச் சீர்படுத்தவேண்டுமென்பதற்காகவும் பரம்பரையாக ஆட்சிபீடத்திலிருந்து வந்த தமிழ்மொழியைத் தாக்க வேண்டுமென்ற நோக்கத்துக்காகவும் தமிழ் சமூகத்துக்குத் தொண்டுசெய்ய முற்பட்டேன். அதை மக்கள் உணர்ந்து என்னை அதிகப்படியான வாக்குகளால் தெரிவுசெய்தார்கள். நான் பாராளுமன்றத்திற்குப் போனதும் கஷ்டப்பட்ட மக்கள் சமுதாயத்திற்காக அரசாங்கத்தில் பெரும் கூக்குரலெழுப்பி பல லட்சம் ஏக்கர் காணிகளை மக்களுக்கு எடுத்துக்கொடுத்துள்ளேன். பாடசாலைகள் இல்லாத இடங்களுக்குப் பாடசாலைகளை உண்டாக்கி ஆசிரியர்களை நியமித்துப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டேன். அத்துடன் வேலையின்றி இருந்த மாணவர்களுக்கும் ஆசிரியர் தொழில் கிடைக்கச் செய்தேன்" என்று தமிழ்க் காங்கிரஸ் வவுனியா அபேட்சகர் திரு. தா. சிவசிதம்பரத்தை ஆதரிக்குமுகமாக வவுனியா நகரசபை முற்றவெளி மைதானத்தில் நகரசபைத் தலைவர் திரு. ம. பொன்னையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. தா. சிவசிதம்பரம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: நான் வவுனியா கச்சேரி வாசலில் நடாத்திய சத்தியாக்கிரகத்தை எதிர்த்தது சமஷ்டிக்கட்சி தான். அவர்களின் கட்சியிலுள்ளவர்கள் வவுனியாவில் தமிழ்மக்கள் சத்தியாக்கிரகம் செய்தால் பெரும் ஆபத்து தமிழ்மக்களுக்கு உண்டெனவும் சத்தியாக்கிரகத்தை விடும்படியும் கேட்டனர். இதை அவர்கள் இன்னும் மறுக்கவில்லை.

நான் சில நியமனங்களில் லஞ்சம்வாங்கியதாகச் சிலர் கூறுகிருர்கள். அப்படி நான் வாங்கியதாக நிரூபித்தால் உயிர்த்தியாகம் செய்வேன் என்று பகிரங்கமாகக் கூறுகிறேன். தமிழ்க்காங்கிரஸ் கொள்கை பற்றியும் நான் செய்த சேவை பற்றியும் எவருடனும் பகிரங்கமாக ஒரே மேடையில் பேசுவதற்குச் சவாலிடுகிறேன்.

எனது இலட்சியம் தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் வேலையின்றிவரும் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதே. தமிழ்மொழிக்கு நாடெங்கும் சம அந்தஸ்து கிடைக்கவேண்டும். விவசாயிகளின் கஷ்டத்தை நீக்குவதற்கும் காட்டின சேவைக்கும் வருங்கால வவிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குத் தீர்வுகாண்பதற்கும் நாட்டில் தலைவிரித்தாடும் பஞ்சநிலை வராமல் தடுப்பதற்கும் நான் நடவடிக்கை எடுப்பேன்.

தென் வியட்னம்

# கோரிக்கை மீதே நடவடிக்கை எடுத்தோம்

## டிட்டோவுக்கு ஜோன்ஸன் செய்தி

பெல்கிரேட், மார்ச் 14

வியட்னும் 'பிரச்னைக்குத் தீர்வொன்றைக் கண்டுபிடிக்கும் வகையில் தற்பொழுது பெல்கிரேடில் கூட்டப்பட்டுள்ள பத்து நடுநிலைமை நாடுகளின் மகாநாடு குறித்து யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோவுக்கு அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸன் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

வியட்னும் பிரச்னையைத் தீர்ப்பதில் அமெரிக்கா முழு அக்கறை கொண்டிருப்பதாகவும் பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டும் என்றும் அந்தச் செய்தியில் அமெரிக்க அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

தென்வியட்னுமின் கோரிக்கையைத் தொடர்ந்தே அமெரிக்கா இவ்விதம் நடவடிக்கை மேற்கொண்டதென்றும் அதிபர் ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்.

வடக்குவியட்னும் அண்டைய நாடுகளின் விவகாரத்தில் தலையிடாமலிருந்தால் அமெரிக்கா வடக்கு வியட்னுமில் தலையிடமாட்டாது என்றும் அதிபர் ஜோன்ஸன் குறிப்பிட்டுள்ளார்.

3-ம் டெஸ்டில்

# இந்தியாவின் அபார ஆட்டம்

## நியூஸிலாந்து தனது 2-ம் இன்னிங்ஸை ஆரம்பித்தது

பம்பாய், மார்ச் 14

இந்தியாவுக்கும் நியூசிலாந்துக்குமிடையே இங்கு மூன்ருவது நாளாக நடைபெறும் மூன்ருவது கிரிக்கெட் டெஸ்டில் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு மொத்தம் 162 ஓட்டங்கள் எடுத்தது.

மூன்ருவது டெஸ்ட்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து தனது முதல் இன்னிங்சில் மொத்தம் 297 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இதனைத் தொடர்ந்து நேற்று இந்தியா தனது முதல் இன்னிங்சை விளையாடத் தொடங்கியது. நேற்றைய தினமே இந்தியா தனது முதல் இன்னிங்சை 88 ஓட்டங்களுடன் முடித்து இரண்டாவது இன்னிங்சில் ஒரு விக்கெட் நஷ்டத்துக்கு 18 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இன்று காலை தனது இரண்டாவது இன்னிங்சை விளையாடத் தொடங்கியது. சர்தேசாயும், போர்டேயும் பொருத்தமான நேரடியாக விளையாடிக்கொண்டிருந்தனர்.

இன்றைய ஆட்டத்தைப் பார்ப்பதற்காக என்றுமில்லாதமாதிரிப் பெருந்திரளான ரசிகர்கள் இங்கு குழுமியிருந்தனர். முதல் இன்னிங்சிலும் பார்க்க இன்று இந்தியா சிறப்பாக விளையாடியது குறிப்பிடத்தக்கது.

இந்தியா தனது முதல் இன்னிங்சை முடித்துக்கொண்டதைத் தொடர்ந்து நியூசிலாந்து தனது இரண்டாம் இன்னிங்சை ஆரம்பித்தது.

---

வவுனியாவில்

# திருடர் தொல்லை குறைவு

வவுனியா, ஞாயிறு

வவுனியா நகர்த்தில் அதிகரித்துவரும் களவுகளைக் கண்டுபிடித்துத் தகுந்த நடவடிக்கை எடுப்பதில் வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. மேகனசிங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

சகல இடங்களிலும் இரவு பகல் நேரங்களில் பொலிசார் ரோந்து சுற்றிவருகின்றனர். களவுகள் சம்பந்தமாக துப்பு அறிவதிலும் மிகவும் அக்கறை செலுத்தப்பட்டுவருகின்றன. வவுனியா நகரத்தில் சைக்கிள் களவு கன்னச்சக்களை வழிப்பறிக்கொள்ளை இப்போது குறைந்துள்ளது. கடந்த வாரத்தில் கையும்மெய்யுமாகச் சிலர் பிடிபட்டனர்.

**மணிவாக்கு**

நாம் உண்மையில் அகிம்சாவாதிகளாயின் உலகிலே மிகமிகத் தாழ்ந்த நிலையிலுள்ளவரிடம் இல்லாத எதையும் நாம் பெற விரும்பக்கூடாது.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

EELA NADU, National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: "EELA NADU" Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு பங்குனி மீ 2 உ (15 3-65)


## மலைநாட்டுத் தமிழரின் வாக்குகள்

பொதுத் தேர்தலில் மலைநாட்டுத் தமிழர்களின் வாக்குகள் யாருக்கு?

இலங்கை வாழ் வாக்காளர் தங்கள் பொன்னான வாக்குகளை அளித்துத் தமது பிரதிநிதிகளையும் அடுத்த அரசாங்கத்தையும் தெரிவு செய்வதற்கு இன்னும் ஒரு வாரம் தான் இருக்கிறது. சென்ற மூன்று மாதங்களாக தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும் அதன் தலைவர்களும் அபேட்சகர்களும் தங்கள் கொள்கைகளையும் நோக்கங்களையும் மட்டுமல்லாது தங்களுக்கெதிராகப் போட்டியிடுபவர்களின் கொள்கைகளிலும் நோக்கங்களிலும் உள்ள குறைகளையும் குற்றங்களையும் எடுத்துக் கூறியுள்ளனர். ஒருவரையொருவர் கண்டித்தும் வந்துள்ளனர். தேர்தல் பிரசாரம் தீவிரமடைந்துள்ளது. கட்சிகளுக்கிடையிலும் ஆதரவாளர்களுக்கிடையிலும் உணர்ச்சி அதிகரித்துள்ளது. சென்ற முறைகளில் போலல்லாது இப்பொழுது வாக்காளர் அரசியலில் அறிவு பெற்றுள்ளனர். அவர்களை எவரும் சுலபத்தில் ஏமாற்றிவிட முடியாது. இலங்கை வாழ் வாக்காளரில் பெரும்பாலானோர் யாரைத் தெரிவு செய்தால் தங்களுக்கு நன்மை கிடைக்குமென்பதையும் அவரவர்கள் சிந்தனைக்கேற்பத் தீர்மானித்திருப்பார்கள். ஆனால் ஒரு பகுதி மக்கள் மட்டும் இத்தகைய தீர்மானம் எதையும் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். அவர்கள்தான் மலைநாட்டு சிறுபான்மையினரான தோட்டத் தொழிலாள வாக்காளர்கள். 151 அங்கத்தவர்களைக் கொண்ட இலங்கைப் பார்லிமெண்ட் சபையில் இவர்கள் தங்கள் பிரதிநிதியாக எவரையும் தெரிவு செய்யக்கூடிய நிலையில் இல்லை.

ஆட்சி பீடத்துக்காகப் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இவர்களுடைய வாக்குகளைப் பெறுவதற்காக என்னென்னவோ பிரசாரங்களைச் செய்கின்றன. இந்த இரண்டு கட்சிகளின் விஷயமும் மலைநாட்டுத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஒன்றுதான். அவர்கள் இந்த பரிதாபகரமான நிலையிலிருப்பதற்கே இந்த இரண்டு கட்சிகளுமே முக்கிய காரணம் என்று கூறலாம்.

**பொதுத்தேர்தலும் அரசியல்கட்சிகளும்–7**

# கல்முனை, கல்குடா, மூதூர் தொகுதிகள்

கல்முனைத் தொகுதியில் 1947-ம் ஆண்டு பொதுத்தேர்தலில் மூன்று அபேட்சகர்கள் போட்டியிட்டார்கள். அப்பொழுது போட்டியிட்டவர்கள் திருவாளர்கள் எம்.எஸ். காரியப்பர், கே. கணபதிப்பிள்ளை, எம். ஏ. எல். காரியப்பர், ஐக்கியதேசியக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட திரு. எம். எஸ். காரியப்பர் அத்தேர்தலில் வெற்றிபெற்றார்.

1952-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் திருவாளர்கள் ஏ. எச். மேர்சா, எம். ஏ. எல். காரியப்பர், எம். எஸ். காரியப்பர் ஆகியோர் போட்டியிட்டு, சுயேச்சையாக போட்டியிட்ட திரு. ஏ. எச். மேச்சா வெற்றிபெற்றார்.

1956-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் எம். எஸ். காரியப்பர், எம்.ஏ. அப்துல்மஜீத், எம்.பி. பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் போட்டியிட்டு - தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. எம். எஸ். காரியப்பர் வெற்றி பெற்றார்.

1960-ம் ஆண்டு மார்ச் தேர்தலில் திருவாளர்கள் எம். எஸ். காரியப்பர், மஷூர் மௌலானா, எம். சி. அகமத், எம். ஏ. எல். காரியப்பர், ஏ. காடர் முகைதீன் ஆகியோர் போட்டியிட்டனர். அப்பொழுது லங்கா பிரஜாதந்திரக்கட்சியில் போட்டியிட்ட திரு. எம். எஸ். காரியப்பர் வெற்றிபெற்றார்.

1960-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் திருவாளர்கள் எம். சி. அகமத், எம். எஸ். காரியப்பர் ஆகியோர் போட்டியிட்டு தமிழரசக்கட்சியைச் சேர்ந்த திரு. எம். சி. அகமத் வெற்பெற்றார்.

1965-ம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் திருவாளர்கள் எம். சி. அகமத், மஷூர் மௌலானா, காடர் முகைதீன், எம். எஸ். காரியப்பர் ஆகியோர்போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளரின் தொகை 23,363

கல்குடாத் தொகுதியில் இன்றைய பொதுத்தேர்தலில் மூன்று பிரதான கட்சிகள் போட்டியிடுகின்றன. ஒன்று தமிழரசுக்கட்சி மற்றவை ஐக்கியதேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுமாகும்.

1947-ம் ஆண்டு இத்தொகுதியில் திருவாளர்கள் வி. நல்லையா, கே. டபிள்யு தேவநாயகம், மீரா லெப்பை, எம். ஏ. சி. எம்சலி ஆகியோர் போட்டியிட்டனர். அப்பொழுது சுயேச்சையாகப் போட்டியிட்ட திரு. நல்லையா வெற்றிபெற்றார்.

1952-ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கியதேசிய்க்கட்சிசார்பில் போட்டியிட்ட திரு. வி. நல்லையா வெற்றிபெற்றார். அவருடன் அப்பொழுது எஸ். சிவஞானம் போட்டியிட்டார்.

1956-ம் ஆண்டில் திருவாளர்கள் ஏ. எச். மாக்கான் மாக்கார், வி. நல்லையா, பி. மாணிக்கவாசகர், எஸ். சிவஞானம் ஆகியோர் போட்டியிட்டனர். சுயேச்சையாகப் போட்டியிட்ட திரு. மாக்கான் மாக்கார் வெற்றிபெற்றார்.

1960-ம் ஆண்டு மார்ச்சில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் திருவாளர்கள் பி. மாணிக்கவாசகர், ஏ. ஐ. மாக்கான் மாக்கார், வி. நல்லையா ஆகியோர் போட்டியிட்டனர், தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. மாணிக்கவாசகர் அப்பொழுது வெற்றிபெற்றார், 1960-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் திருவாளர்கள் பி. மாணிக்கவாசகர், எஸ். சிவஞானம் ஆகியோர் போட்டியிட்டு திரு. மாணிக்கவாசகர் வெற்றிபெற்றார்.

1965-ம் ஆண்டு மார்ச்மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் பி. மாணிக்கவாசகர், கே. டபிள்யூ. தேவநாயகம், வி. நல்லையா, யூ. ஏச். அப்துல்காணி பாவ, எம். ஏ. சி. அப்துல் ரகுமான் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளரின் தொகை 24,008.

மூதூர் தொகுதியில் 1947-ம் ஆண்டில் திருவாளர்கள் ஏ. ஆர். ஏ. எம். அபூபக்கர், எம். இ. ஏச். முகமது அலி, இ. சொக்கலிங்கம், ஏ. சி. செல்வராசா ஆகியோர் போட்டியிட்டனர். 1952-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருவாளர்கள் எம். இ. ஏச். முகமதலி, ஏ. ஆர். ஏ. எம். அபூபக்கர் ஆகியோர் போட்டியிட்டனர். 1956-ம் ஆண்டில் திருவாளர்கள் எம். ஏ. எச். முகமதலி, ஏ. எச். அல்விஸ் ஆகியோர் போட்டியிட்டனர். 1962-ம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற இடைத் தேர்தலில் திருவாளர்கள் எம். இ ஏச். முகமதலி, எஸ். ஏ. ஹமீத், ஆர். எம். குணத்திலகா, இ சுந்தரலிங்கம் ஆகியோர் போட்டியிட்டனர்.

1947-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் திரு. அபூபக்கரும், 1952 ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் திரு. முகமதலியும், 1956-ம் ஆண்டு திரு. முகமதலியும், 1962-ம் ஆண்டு இடைத் தேர்தலில் திரு. முகமதலியும் வெற்றி பெற்றுர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1960-ம் ஆண்டு மார்ச் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் பி. ஏகாம்பரம், எம் இ ஏச் முகமதலி, ஏ எல் அப்துல் மஜீத், எஸ் பி வீரகூன், ஏ எச் அல்விஸ், பி டி இ விக்டர் பெரரா, ரி ஏ பி துரைநாயகம், ஏ ஆர் எம் அபூபக்கர், என். ரி பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் போட்டியிட்டனர்; இத்தொகுதியில் திருவாளர்கள் பி ஏகாம்பரமும், எம் இ எச் முகமதலியும் வெற்றிபெற்றனர். இத்தொகுதி 1960-ம் ஆண்டு இரண்டு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்வதற்குரிய தொகுதியாக்கப்பட்டது.

1960-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருவாளர்கள் ரி ஏகாம்பரம், ஏ எல், ஏ. மஜீத், எம். இ. எச். முகமதலி, எச் டி வீரரத்தின, பி டி இ விக்டர் பெரரா ஆகியோர் போட்டியிட்டு திருவாளர்கள் ரி ஏகாம்பரமும், ஏ எல் ஏ மஜீத்தும் வெற்றி பெற்றனர்.

1965-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் எம் இ எச் முகமதலி, ஏ ஏல் ஏ மஜீத், எச் டி எல் வீரரத்தின, டி வி பொனிலே, எஸ் ஆறுமுகம், ஆர் எம் குணத்திலகா ஆகியோர் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் தொகை 35,516.

# ஐயாறன் எழுதுவது

மலைநாட்டு தமிழர இம்முறை தேர்தலில் எந்தக் கட்சியை ஆதரிக்கப் போகிறார்கள்? இது மிக முக்கியமான கேள்வி. இந்தக் கேள்வியின் பதிலில்தான் அநேகமாக இலங்கையின் எதிர்கால அரசாங்கமும் தங்கியிருக்கக் கூடும். ஆகையால் ஸ்ரீமா, டட்லி உள்ளிட்டு எல்லாத் தலைவர்களும் அவர்களது ஆதரவைப் பெற ஆவலுடன் இருக்கின்றனர்.

* * *

மலைநாட்டுத் தமிழர்களின் வாக்குப்பலம் எவ்வளவு தெரியுமா? திரு. தொண்டமானைத் தலைவராகக் கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரசார் நடத்தும், "காங்கிரஸ்" என்ற பிரசுரத்தின் மார்ச் மாத இதழில் இதுபற்றி உத்தேச விபரங்கள் வெளியாகியுள்ளன.

மொத்தம் 35 தொகுதிகளில் மலையகத் தமிழ் வாக்காளர் பிரிந்துள்ளனர். பசறையில் 1500, பதுளை 1500, சொரணதோட்டை 2000, பண்டாரவளை 1000, அப்புத்தளை 1000, வலப்பனை 1500, ஹங்குராங்கட்ட 1000, நுவரேலியா 6750, மஸ்கேலியா 8000, கொத்மலே 3500, கம்பளை 2000, நாவலப்பிட்டி 2500, கண்டி 2500, செங்கடகல 8000, குண்டசாலை 2000, ஹேவாஹெட்ட 1500, பத்தேகம 3000, தெல்தெனியா 1000, மாத்தளை 2500, ரத்தோட்டை 3500, மாவனெல்ல 1000, பலாங்கொடை 750, இறக்குவானை 1500, பெல்மதுளை 1000, இரத்தினபுரி 1500, மத்துகாமம் 750, எட்டியாந்தோட்டை 1500, கேகாலை 500, அவிசாவெல 750, ருவான்வெல 1500, தெஹியோவிற்ற 2000, அகலவத்த 750, டெடிகம 750, அலவாபரணகம 500, வெலிமடை 500.

* * *

மலையகத் தமிழர்களின் வாக்குரிமை வெகுவாகப் பறிக்கப்பட்டுள்ளதுதான். அவர்கள் எந்தத் தொகுதியிலும் போட்டியிட முடியாத நிலையில்தான் உள்ளனர். என்றாலும் அவர்களது வாக்குப்பலத்தை மற்ற அரசியல் கட்சிகள் அலட்சியம் செய்ய முடியாதபடி உள்ளது. யாரை ஆதரிப்பது என்று மலையகத் தமிழர் தீர்மானிப்பதும் சுலபமன்று. ஏனெனில் அவர்களைப் பொறுத்தவரையில் ஸ்ரீமா, டட்லி எல்லாரும் ஒன்றுதானே!

* * *

"காங்கிரஸின் இந்த இதழில் "வாக்குரிமை வைத்திருக்கும் பாட்டாளிப் பெருமக்களே ஜாக்கிரதை" என்று கொட்டை எழுத்துக்களில் திரு. தொண்டமான் பிரசங்கமொன்று எச்சரிக்கின்றது. ஆனால் எந்தக் கட்சியை ஆதரிக்க வேண்டுமென்று அவர் வெளிப்படையாகக் கூறவில்லை.

என்றாலும் "ஜனநாயகம் தழைத்தோங்க" என்ற தலையங்கத்தையும் வேறு சில செய்தித் தலைப்புகளையும் பார்க்கும்போது இந்தக் காங்கிரஸ் ஐ. தே. கட்சி பக்கம் சற்று சாய்ந்துள்ளதுபோல் தோன்றுகின்றது. "ஜனநாயகத்தைக் காக்கும் கட்சி ஐக்கியதேசியக் கட்சியே என்று கூறுகிறது ஒரு செய்தித் தலைப்பு. இக் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி பூண்டுலோயாவில் சென்ற வாரம் இப்படிப் பேசியுள்ளார்.

*

"திரு. கே. எம். பி. ராஜரத்னா பற்றி தலைவர் தொண்டமான கூறியது" என்று ஒரு செய்தி அதில் வெளியாகியுள்ளது. "ஒருவிஷயத்தில் நாம் வெளிமடை அங்கத்தவரின் நிலையை நான் மதிக்கி

(5-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

றேன், பலஹீனப்பட்ட அவர் மிகவும் நேர்மையானவர். பல விஷயங்களில் அவர் கொள்கையிலிருந்து நான் மாறுபட்டவன். ஆனால் அவர் தம் மனதுக்குச் சரியென்று தோன்றுவதை தேகிலை யாவும் வெளிப்படையாகவும் டுணும் படைத்தவர், மனதிலொன்றும் செயலொன்றுமாய் நடக்காதவர்..." என்கிறது அச்செய்தி. காற்று எந்தப் பக்கம் அடிக்கிறது?

* * *

ஆனால் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அஸீஸின் கருத்து என்னவென்று தெரியவில்லை. அவர் இப்போது இந்தியாவில் இருக்கிறார். தேர்தலுக்கு முன் அவர் திரும்பக்கூடும். அவர் தொண்டமான் கருத்தை ஆதரிப்பாரா?

ஃ ஃ ஃ

விண்முழுதும் மண்முழுதும் மானார் தாமே மிக்கோர்கள் ஏத்துங்குணத்தார் தாமே, கண்விழியாற் காமனையும் காய்ந்தார் தாமே காலங்களூழி கடந்தார் தாமே, பண்ணியலும் பாடலுகப்பார் தாமே பழனை பதியாவுடையார் தாமே, தண் மழுவாளேந்து கரத்தார் தாமே திருவாலங்காடுறையுஞ் செல்வர் தாமே

—அப்பர் அடிகள்

# வியட்னாமுக்கு சமாதான தீர்வுகாண பெல்கிரேட்டில் மகாநாடு

## பத்து மண்டலசார்பற்ற நாடுகளின் பிரதிநிதிகள் ஆலோசனை நடத்துகின்றனர்

பெல்கிரேட், மார்ச் 14

வியட்னாம் பிரச்னைக்கு சமூகமான தீர்வொன்றைக்கொண்டு வரும்பொருட்டு பத்துமண்டல சார்பற்ற நாடுகளின் பிரதிநிதிகள் பெல்கிரேட்டில் நேற்றுக் கூடினர். இவர்கள் நேற்று பகலிலும் இரவிலும் கூடிய பிரச்னைக்குத் தீர்வொன்றை காண்பதில் மூழ்கினர்.

இந்த மாநாட்டில் இலங்கை, இந்தியா, அல்ஜீரியா, சிப்ரஸ், கானா, கினி, மாலி, ருஷியா, ஐக்கிய அரபு குடியரசு, யுகோஸ்லேவியா ஆகியநாடுகள் கலந்து கொள்கின்றன. ஆப்கானிஸ்தான் இந்த மகாநாட்டுக்கு ஒரு பார்வையாளரை அனுப்பியுள்ளது.

யுகோஸ்லேவியா அதிபர் மார்ஷல் டிட்டோ, கென்யா அதிபர் ஜோமோ கென்யாட்டாவுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் வியட்னாம் பிரச்னைக்குத் தீர்வொன்றைக் காண்பதில் முழுமுயற்சி எடுக்குமபடி கோரியுள்ளார்.

### அதிபர் ஜோன்ஸனின் கருத்து

அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் நேற்று வாஷிங்டனில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் தென்கிழக்கு ஆசியமக்கள் நிரந்தர சமாதானத்துடன் வாழ அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்கா அதற்கான வழிவகைகளைக் காண்பதில் ஈடுபட்டிருக்கிறதென்றும் கூறினார்.

தென்வியட்னாமுடனான யுத்தத்தை நிறுத்துவதா அல்லது நீடிப்பதா என்பதை விடயமும் இன்னும் தீர்மானிக்கவில்லையென்றும் அவர் கூறினார்.

---

## சீனாவின் அணுப்பலம்

லண்டன், மார்ச் 14

1970-ம் ஆண்டுக்குள் சமபூமியில் சீனா அணு ஆயுத இராணுவ சாதனங்களைக் கொண்டிருக்குமென்று அமெரிக்க அணு ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் இங்கு தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலத்திற்கு சீனா இவை புகுந்ததொன்றை வெடிக்கவைக்கும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

---

## பஸ் விபத்து: 12 பேர் பலி

பொலிவியா, மார்ச் 14

இங்கிருந்து 80 மைல் தூரத்தில் பஸ் ஒன்று பாதையை விட்டு விலகி நதியொன்றில் பாய்ந்து விழுந்ததில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

ஒரு பெண்ணும் இரு குழந்தைகளும் உயிர் தப்பியுள்ளனர்.

---

## நூலகம் தீக்கிரை

ஆக்ரா, மார்ச் 14

இங்குள்ள அமெரிக்க தகவல் பகுதி நூல் நிலையத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கி பெரும் சேதத்தை விளைவித்துள்ளனர். நூல் நிலையத்தின் யன்னல்கள் உடைக்கப்பட்டிருந்தன. பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் தீயில் கொளுத்தப்பட்டன.

"ஆபிரிக்காவின் முதல் எதிரி அமெரிக்காவே" என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

---

# மீண்டும் ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

## உதகமண்டலத்தில் அமைதி

சென்னை, மார்ச் 14

கோயம்புத்தூரிலிருந்து 60 மைல் தூரத்திலுள்ள உதகமண்டலத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய ஹிந்தி எதிர்ப்பாளர் கள்மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். பத்து பேர் காயமடைந்தனர்.

இந்தத் துப்பாக்கிப்பிரயோகம் இரண்டு இடங்களில் நடைபெற்றது. மாநகரசபை உயர்தர பாடசாலைக்கு முன்பாகவும் தபால் கந்தோருக்கு அருகாமையிலும் இச்சம்பவங்கள் நிகழ்ந்தன. இதனைத் தொடர்ந்து கலவரப் பகுதிகளுக்கு இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

பாடசாலைகளுக்குச் செல்லாது வேலைநிறுத்தம் செய்யும் மாணவர்கள், மற்றைய மாணவர்களைத் தடுத்ததைத் தொடர்ந்து நான்கு மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இதன்பின்னரே மேற்படி சம்பவங்கள் நிகழ்ந்ததாகப் பொலிஸ் அறிக்கையொன்று கூறுகின்றது.

உதகமண்டல நகரில் மாலை முதல் காலைவரை ஊரடங்கு உத்தரவுகள் விதிக்கப்பட்டிருக்கிறது. கூட்டங்கள், ஊர்வலங்கள் எல்லாவற்றுக்கும் தடைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. வீதியோரங்களில் பகல் வேளையில் ஐந்துபேருக்கு அதிகமாக கூடி நிற்பதற்கும் தடைபோடப்பட்டுள்ளது. தற்பொழுது இப்பகுதியில் அமைதி நிலவுவதாக இன்று கிடைத்த கடைசிச் செய்திகள் கூறுகின்றன.

### தந்திக்கம்பிகள் அறுக்கப்பட்டன

சென்னை ராஜ்யத்திலுள்ள வட ஆற்காடு மாவட்டத்தில் ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் தந்திக்கம்பிகளையும் அறுத்து ஏராளமான தந்திக் கம்பங்களையும் அடியோடு வீழ்த்தியுள்ளனர்.

சென்னையிலிருந்து 60 மைல் தூரத்திலுள்ள தக்கோலம் எனுமிடத்தில் சுமார் 50ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் தபால்நிலையங்களைத் தாக்கிச் சேதப்படுத்தினர். தபால் பெட்டிகளை நாசமாக்கி பெயர்ப்பலகைகளைத் தகர்த்தெறிந்தனர்.

வேலூர் மாவட்டத்தில், ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் கும்பலாகச் சென்று பஸ்களை நிறுத்தினர். ஹிந்தி எதிர்ப்புச் சுலோகங்களை அந்த பஸ்களில் அவர்கள் ஒட்டினர்.

உலைசப் பிரயாணிகள் பஸ் ஒன்று ஆர்ப்பாட்டக்காரர்களின் தார்ப்பூச்சுக்குள்ளானது.

சென்னை நகரில் நிலைமை திருந்தியிருக்கிறதென்றும் அநேக மாணவர்கள் பாடசாலை செல்கின்றனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

---

## எலிஸபெத் டெயிலர் தந்தை காலமானார்

ஹாலிவூட், மார்ச் 14

ஹாலிவூட் நடிகை எலிஸபெத் டெயிலரின் தந்தை பிரான்சிஸ் டெயிலர் காலமானார். தந்தையின் சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் வீடுவந்துசேர்ந்த எலிஸபெத் டெயிலர், நிருபர்களிடம் தெரிவிக்கையில்; தந்தைக்காக நான் கடவுளிடம் பிரார்த்திக்கமட்டுமே முடியும் என்று கூறினார்.

---

## 150 பதட்லாவோ மாண்டனர்

வியண்டைன், மார்ச் 14

மத்திய லாவோஸில் நேற்று நடைபெற்ற சண்டையில் 150 பதட்லாவோ துருப்புகள் கொல்லப்பட்டனர். அரசாங்க தரப்பில் 4 பேர் மாண்டனர். ஒரு வியட்னாமிய துருப்புகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

---

## கிணறுகளில் நீர் பரிசோதனை

பருத்தித்துறை, ஞாயிறு

வடமராட்சிப் பகுதியில் ஒடாநாட்டின் நீர்ப்பிரச்னை சம்பந்தமாக மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகளின் ஆரம்பமாக 100 கிணறுகள் பரிசோதனை செய்யும் சேவை இம்மாதம் முதல் நடைபெற்றுவருகிறது. 25 கிராமசேவையாளர்கள் தமது வட்டாரத்தில் தலா 4 கிணறு வீதம் இப்பரிசோதனையை ஆரம்பித்துள்ளனர்.

சில கிராமசேவையாளர் பிரிவுகளில் கடந்த ஒருவாரகாலமாக நடைபெற்ற பரீட்சையில் சில கிணறுகளில் ஒரேயளவான நீர் காணப்படுவதாயும் சில கிணறுகள் வற்றாத தன்மைவாய்ந்த ஊற்றுடையனவாய் இருப்பதாகவும் கூறப்படுகிறது. புலோலி தெற்கு மந்திகையை அடுத்து 4 கிணறுகள் இத்தன்மை உடையனவென அறியப்படுகின்றது.

---

மே. ஜெர்மனி நடவடிக்கை

# கெய்ரோவில் அரபு நாடுகள் கூட்டம்

## கார்ட்டூமில் 10,000 பேர் ஆர்ப்பாட்டம்

கெய்ரோ, மார்ச் 14

மேற்குஜெர்மனியின் நடவடிக்கைகள் குறித்து ஆராயும் பொருட்டு பதின்மூன்று அரபு நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள் நேற்று இங்கு கூடினர்.

### கார்ட்டூமில் ஆர்ப்பாட்டம்

மேற்கு ஜெர்மனியின் நடவடிக்கைகளைக் கண்டித்து நேற்று சூடான் தலைநகரமான கார்ட்டூமில் பத்தாயிரத்துக்கதிமான மக்கள் மேற்கு ஜெர்மனி தூதராலயம்முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மேற்கு ஜெர்மனியுடனான ராஜீய உறவுகளை சூடான் முறித்துக் கொள்ள வேண்டுமென்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

ஐக்கிய அரபுக்குடியரசிலும் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

---

# "மலைநாட்டு மக்களை நான் காட்டிக் கொடுக்கவில்லை"

## காங்கிரஸ் தலைவர் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"மலைநாட்டு மக்களுக்கு நான் துரோகஞ் செய்துவிட்டதாக கூறுகின்றார்கள். நானும் திரு. செல்வநாயகமும் சேர்ந்து இந்தியர் பிரஜா உரிமைச் சட்டத்திற்கு எதிராக வாக்களித்திருக்கின்றோம்" என்று தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தம்மை ஆதரிக்குமுகமாக நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

வண்ணை ஸ்ரீ வெங்கடேசவரதராஜப் பெருமாள் கோவிலடியில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் மேலும் கூறிப்பிட்டதாவது:

தமிழ் பேசும் மக்கள் என்மீது வைத்த நம்பிக்கைக்கு நான் ஒருபோதும் துரோகஞ் செய்ததில்லை என்னால் முடிந்தவரை அவர்களுக்குத் தொண்டு செய்வதிலே ஈடுபட்டு வந்துள்ளேன். தமிழ் மக்களுக்காக மட்டுமின்றி சிங்கள மக்களுக்கும் நான் கடமையாற்றி வந்துள்ளேன்.

1948-ம் ஆண்டு இலங்கை இந்தியர் மசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்ட போது அதனை எதிர்த்து வாக்களித்தேன். இச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிமை வழங்குவதற்காக இலங்கை-பாகிஸ்தானியர் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச் சட்டத்தின் மூலம் நாடற்றவர்களான 8 லட்சம் மக்களில் 4 1/2 லட்சம் மக்களுக்கு உரிமை கிடைக்க வழி ஏற்பட்டது ஆனால் சமஷ்டிக்கட்சியினர் இச் சட்டத்தைப் பகிஷ்கரிக்கும்படி மலைநாட்டு மக்களைத் தூண்டியதன் விளைவாக இரு ஆண்டுகளின் உரிமைக்காக விண்ணப்பிக்க வேண்டியவர்கள் ஒன்றரை ஆண்டுகள் இச் சட்டத்தைப் பகிஷ்கரித்தனர். கடைசி ஆறுமாதங்களில் விழித்து அடித்து விண்ணப்பங்களைத் தவறாக நிரப்பி அனுப்பினர். இதன் விளைவு தான் மலைநாட்டுத் தமிழர்கள் உரிமை இழக்க நேர்ந்தது. இதற்கு நான் எவ்வாறு பொறுப்பாளியாக முடியும். இலங்கை பாகிஸ்தானியர் சட்டத்திற்கு நான் ஆதரவளித்தனால் மட்டும் அது நிறைவேறவில்லை. இருபதுக்கு மதிகமான வாக்குகளால் அச்சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கையில் நான் மட்டும் தான் இதற்குப் பாத்திரமானவன் என்று கூறுகிறார்கள்.

நாட்டின் தேசியக் கொடி விஷயத்திலும் துரோகமிழைத்து விட்டதாகக் கூறுகிறார்கள். பௌத்த கொடியை நாட்டின் தேசிய கொடியாக இருக்க வேண்டுமெனச் சிங்களத் தலைவர்கள் திடசித்தமாக இருந்தனர். பௌத்த கொடிக்கு மாறாக ஏதும் அம்சங்கள் இருந்தால் கூட கொடியைக் கம்பத்திலேறி அறுத்து விடுவேன் என்று சிங்களப் பிரமுகர் ஒருவர் கடுமையாக நின்ற நேரத்தில் கூட மந்திரி சபையினரைச் சமாதானப்படுத்தி தேசிய கொடியில் தமிழ் முஸ்லிம் மக்களும் இருக்கிறார்கள் என்பதனை உணர்த்திய பெருமை என்னைச் சேர்ந்தது. மூலையில், தமிழ் மக்கள் இதனைச் சிந்திக்க வேண்டும். நான் மட்டும் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளாதிருந்தால் முஸ்லிம், தமிழ் இனங்களுக்கு தேசியக் கொடியில் இடமில்லாதிருக்கும்.

மந்திரி சபையில் நான் சேர்ந்தது எனது சுயநலத்திற்காகவில்லை, தமிழ் பிரதேசங்களின் நலனுக்கான சகல முயற்சிகளும் நான் மந்திரி சபையில் இருக்கும் போது எத்தனையோ கஷ்டங்களுக்கிடையே மேற் கொள்ளப்பட்டன.

(6-ம் பக்கம் பார்க்க)

---

## அரசினர் வைத்தியசாலையில் புதிய வார்ட்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை (புலோலி) அரசினர் வைத்தியசாலையில் 6 படுக்கைகளைக்கொண்ட வார்ட் ஒன்று விரைவில் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

வசதிகள் அமைக்கப்பட்டதும் நாளொன்றுக்கு 2 ரூபா செலுத்தவேண்டியதுமான இந்த வார்ட் பிரசவத் தாய்மார்களுக்கானதாகவே இருக்குமெனக் கூறப்படுகிறது.

அடுத்த வாரம் திறக்கப்படவிருக்கும் இந்த வார்ட்டை யாழ். மாவட்ட சுகாதாரத் துறை அத்தியட்சகர் திறந்து வைப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## "சமஷ்டியே சரியான வழி"

வல்வெட்டித்துறை, ஞாயிறு

இலங்கைத் தமிழரசுக்கட்சிப் பருத்தித்துறை வேட்பாளர் திரு. க. துரைரத்தினத்தை ஆதரித்து பொலிகண்டிச் சந்திக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் திரு. வ. சு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உடுப்பிட்டி வேட்பாளர் திரு. கே. ஜெயக்கொடி பேசுகையில் இலங்கையில் சிங்களத்தை அமுலாக்கி நடத்தமுடியாமல் தடுத்துவைத்த பெருமை இலங்கை தமிழரசுக்கட்சிக்கே உரியதாகும் என்றார்.

பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிடும் கே. துரைரத்தினம் பேசுகையில் உலகத்தில் எங்கெங்கே சிறுபான்மையினம் இருக்கிறதோ அங்கெல்லாம் சுபிட்சத்துடன் வாழ ஒரேவழி சமஷ்டி ஆட்சி முறையே என்றார்.

திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் தமிழரசுக்கட்சி தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைத் தரும்எவருடனும் ஒத்துழைக்க ஆயத்தமாக இருக்கிறதென்று கூறினார்.

---

## வடமாகாண ஆசிரியர் சங்க சங்கீத பேச்சுப்போட்டி

யாழ்ப்பாணம் ஞாயிறு

வடமாகாண ஆசிரியர் சங்கம் இம்மாதம் 6ந் தேதி குறிப்பிட்டபடி நடத்திய 1965ம் வருடத்துக்கான பேச்சு சங்கீத கட்டுரைப் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களில் ஒரு பகுதியினருக்கான இறுதிப்போட்டி நேற்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்றது. மற்றப் பகுதியினருக்கான இறுதிப் போட்டி யாழ் மத்திய கல்லூரியில் நாளை நடைபெறும் மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கும் போட்டிகளின் விபரம் வருமாறு:

சிரேஷ்ட மாணவிகள் சங்கீதப்போட்டி, கனிஷ்ட சிரேஷ்ட மாணவிகள் சங்கீதப் போட்டி - குழுவாக, ஆங்கில-தமிழ் பேச்சுப்போட்டி முதலியன.

மாலை 6 மணிக்குப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

---

## பாகிஸ்தானில் அணுசக்தி நிலையம்

கராச்சி, மார்ச் 13

பாகிஸ்தானில் அணுசக்தி நிலையம் அமைப்பதற்கு அமெரிக்கவின் உதவிபற்றி தற்போது பேச்சுக்கள் நடைபெற்றுவருவதாய் அறிவிக்கப்பட்டது.

# “சாத்விகப் போராட்ட மூலமே உரிமைகளைப் பெறலாம்”

## குருநகர் கூட்டத்தில் மாஜி எம். பி.

யாழ்ப்பாணம், திங்கள்

“இந்த நாட்டில் போராடியோ, சாத்வீக நெறியின்றோ தமிழ்மக்கள் உரிமை பெற்றுவாழவேண்டும், இல்லையேல் அடிமைகளாக வாழவேண்டும்” என்று பருத்தித்துறை முன்னாள் எம். பி திரு. க. துரைரத்தினம் யாழ்ப்பாணம் குருநகர் மைதானத்தில் நடைபெற்ற தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் தமிழரசு வேட்பாளராகப் போட்டியிடும் திரு. சி. எக்ஸ். மார்ட்டினை ஆதரித்து நடைபெற்ற தேர்தல்பிரசாரக்கூட்டத்தில் பேசும்போது திரு. துரைரத்தினம் மேலும் குறிப்பிட்டதாவது:

பட்டாளத்திற்கு எதிராகப் போராடி நாம் உரிமைபெற முடியாது. சாத்வீகநெறிதான் தமிழரால் முடியக்கூடிய போராட்டவழி.

தமிழ்மக்கள் இன,மத பேதமின்றி ஒன்றுபட்டுவிட்டார்கள். உலகம் முழுவதையும் பெற்றாலும்கூட ஒருவர் தமது ஆத்மாவை இழக்கக்கூடாது. வருங்காலச்சந்ததியினரின் நலனுக்காக நாம் நமது உரிமைகளைப் பெற்றேயாகவேண்டும். உரிமை இல்லாமல் மனிதன் வாழமுடியாது. தமிழரசுக்கட்சி எல்லா இன மக்களுக்கும் சேவைசெய்துவருகிறது.

எந்த அரசாங்கம் வந்தாலும் எமக்கு அரசாங்க உத்தியோகம் கிடைக்காது. நமது பொருளாதாரத்தை நாம் அபிவிருத்தி செய்யத்தான்வேண்டும். வடக்கு—கிழக்கு மாகாணங்களை வளமுள்ளதாக மாற்றமுடியும். இஸ்ரேல் நாட்டு மக்கள் முன்னேற்றம் அடைந்திருப்பதை நாமும் அறிந்து அதற்காகக் கடுமையாக உழைக்கவேண்டும்.

நியாயவாதி திரு. மு. ஆலாலசுந்தரம் பேசியதாவது:

தமிழருக்கு என தமிழரசும் சிங்கள மக்களுக்கென சிங்கள அரசும் உருவாக்கப்பட்டு இரு அரசுகளும் கொழும்பு நகரில் அமைந்த கூட்டாட்சி மூலம் நாட்டை ஆள்வதே தான் சமஷ்டிக்கட்சியின் இலட்சியமாகும். சமஷ்டிக்கொள்கை நமது நாட்டிற்கு மட்டும் இறக்குமதி செய்யப்பட்ட ஓர் சரக்கல்ல. பலநாடுகளில் பல இனமொழி பேசும் மக்கள் வாழும் நாடுகளில் அமுலில் இருக்கும் சமஷ்டிக்கொள்கை நமது நாட்டிற்கும் பொருத்தமானது.

இந்த நாட்டு மக்கள் சுயமரியாதையுடன் வாழவேண்டுமானால் சமஷ்டி ஆட்சிதான் உருவாகவேண்டும். சமஷ்டிக் கட்சித்திட்டம் நல்லதிட்டம் என்பதைத் தமிழ்மக்கள் உணர்ந்துவிட்டார்கள் என்பதை எதிர்வரும்பொதுத் தேர்தல் நிரூபிக்கும்.

தனிச்சிங்களச்சட்டம் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டபோது மொழிப்பிரச்னைகளுக்குத் தீர்வுகாணப்பட்டுவிட்டது என்று கூறிய காலஞ்சென்ற பிரதமமந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவின் கூற்றை மறந்து தமிழ்மொழிக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை எனக் கிளர்ச்சிகள் நடத்தி மொழிப் பிரச்னையைத் தீர்க்கவேண்டிய—தீர்க்கப்படவேண்டிய பிரச்னையாக வைத்திருப்பது தமிழரசுக்கட்சியாகும்.

யாழ்ப்பாணம் தமிழரசு வேட்பாளர் திரு சி. எக்ஸ். மார்ட்டின் பேசியதாவது:

யாழ்ப்பாணத் தொகுதியில் கட்சிரீதியில் இருவரும், சுயேச்சையாக ஒருவரும் போட்டியிடுகின்றார்கள். தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதியை இப்பகுதி மக்கள் தெரிவுசெய்து பலகஷ்டங்களை அனுபவித்தபின் சுயேச்சை அபேட்சகரைத் தெரிவுசெய்தனர்.

இத்தேர்தலில் தமிழரசு வேட்பாளராகப் போட்டியிடும்வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கின்றது. தமிழ் பேசும்மக்களின் நன்மைக்காகப் போராடிவருகின்ற தமிழரசுக்கட்சியை யாழ்ப்பாண மக்கள் ஆதரிக்கவேண்டும்.

ஒற்றையாட்சித் திட்டம் கூடாது. தமிழருக்கு நன்மை தராது என்று கூறிய திரு ஜி. ஜி. பொன்னம்பலம் இன்று ஒற்றையாட்சிதான் இந்நாட்டிற்கு உகந்தது என்கிறார். தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கணிக்கப்படுவதற்குக் காரணம் ஒற்றையாட்சியே. எனவே தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள தமிழரசுக்கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டும்.”

மற்றும் பலரும் பேசினர்.

# நிவாரண வேலைகள் திருப்தி இல்லையாம்

வவனியா, சனி

வவனியா வடக்குப் பகுதியிலும், செட்டிகுளப்பகுதியிலும் [illegible] நிவாரண வேலைகள் திருப்திகரமாக நடைபெறவில்லை என்று மேற்படி கிராம சபை மன்றங்களிலும் கிராமமுன்னேற்றச் சங்கங்கள் போன்ற மன்றங்களிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

# “அடிப்படை உரிமை சாஸனம்”

யாழ்ப்பாணம், திங்கள்

‘ஒற்றையாட்சித்திட்டத்தில் அடிப்படை உரிமைச் சாசனம் ஒன்று சேர்க்கப்படவேண்டும். இதற்கான சகல நடவடிக்கைகளையும் தமிழ்க்காங்கிரஸ் மேற்கொள்ளும்’ என்று உடுவில் தொகுதி தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிடும் திரு. என் சிவநேசன் மானிப்பாயில் தம்மை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

ஒற்றையாட்சித் திட்டம் தவறானது என்று சிலர் கூறுகின்றனர். மக்கள் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய வகையில் அடிப்படை உரிமைச் சாசனத்தைச் சேர்க்க வேண்டும். சம அந்தஸ்து கொள்கைக்காகத் தமிழ்க் காங்கிரஸ் போராடி வருகிறது. தமிழ்க்காங்கிரஸ் கொள்கைகள் சாத்தியமானவை. தமிழ்மக்கள் தமது இழந்த உரிமைகளைப் பெற்றுக்கொள்ள தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டும்.”

மற்றும் பலரும் பேசினர்.

# “உரிமைகளைப் பெற்றுத் தருவாரா?”

சாவகச்சேரி, ஞாயிறு

“தமிழரசுக் கட்சி தமிழ்மக்களின் விடுதலையைக் குறிக்கோளாகக்கொண்டு சிறந்த முறையில் ஜனநாயக ரீதியில் செயல்பட்டுவருகிறது” என்று சாவகச்சேரித் தொகுதித் தமி

(5-ம் பக்கம் பார்க்க)





அருந்துக

நுவரெலியா

இது சிறந்த பியர் ஏனெனில்



★ 100 வருட வடிமுறை அநுபவத்தைக்கொண்டு தயாரிக்கப்படுகிறது.

★ 3 சர்வதேச பரிசுகளை சுவீகரித்தது.

★ இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம், தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.

மேலும், வடி முறையில் முதிர்ந்த அநுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது. தெரிவதற்கு பில்ஸ்னர், ஏல், லாகர்.

சிலோன் புருவெரி லிமிடெட்

## "உரிமைகளைப் பெற்றுத் தருவாரா?"

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மூர அபேட்சகர் திரு. வ. ந. நவரத்தினம் பெருங்குளத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

திரு தம்பு சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் தேர்தல்காலத்தில் மாத்திரம் மக்கள் மத்தியில் தோன்றுபவர்களும் பதவிக்காக வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிடுபவர்களும் தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளை மீட்டுத் தருவார்களா என்று தமிழ்மக்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

வழக்கறிஞர் மு. ஆலாலசுந்தரம், திரு. எஸ். கந்தசாமி, செல்வன் தங்கராசா உட்பட வேறு பலரும் பேசினர்.


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



உங்கள் இல்லங்களை
வாசனையால் பரிமளிக்கச் செய்யுங்கள்

## நறுமணம் கமழும் மனோரம்மியமான "ராதா"

★ ஜெகன் மோகன் ஜவ்வாது வத்தி
★ 99 ஸ்பெசல் ஜவ்வாது வத்தி
★ பத்மினி ஜவ்வாது வத்தி
★ ஸ்பெசல் அம்பர் வத்தி
★ இந்திராணி வத்திகள்

இந்தியா வத்தி போன்ற அதி உன்னத தயாரிப்புகள்;
இன்றே கேட்டு வாங்குங்கள்.
எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்:
**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**
(மருந்துகள், மருந்துச்சரக்குகள், வாசனதிகள் வியாபாரம்)
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், போன்: 541, 7068
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.


## அறிவித்தல்

### யாழ். விவாக அந்திய கால சேமலாப நிதிச் சங்கம்

11, ஜி. மொம்சாக் மாளிகை ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி சங்கக் காரியதரிசியாகவும், வடமராட்சிப் பகுதியின் பிரதிநிதி (ஏஜெண்ட்) யாகவும் திரு. ஆ. வீரவாகு என்பவர் 14-8-65-ம் திகதியிலிருந்து விலகிவிட்டார். அவருடன் சங்கவிடயமாக 14-8-65-ம் திகதி தொடக்கம் கொடுக்கல் வாங்கல் செய்யவேண்டாமென அங்கத்தவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வடமராட்சிப் பகுதிக்கு திரு காசிநாதன் சுப்பிரமணியம் (மணியம்ஸ்ஸ்ரோர் கரவெட்டி) என்பவரை ஷெ சங்க ஏஜெண்டாக நியமித்துள்ளோம்.

திரு. தியாகராசசிவ ஐயர் (ஸ்ரேசன் ரோட், சுன்னாகம்) அவர்களை மேற்படி சங்கக்காரியதரிசியாக 14-8-65 தொடக்கம் நியமித்துள்ளோம் என்பதை அறியத்தருகிறோம். 1677

## விற்பனைக்கு

உதயதாரகை சுலைக்கல்லூரியில் புதிய தமிழ் தட்டச்சு (New Remington Rand Standard) ஆங்கில தட்டச்சு, (Smith Corner Standard) ஆங்கில தட்டச்சு (Underwood Standard) ஆங்கிலதட்டச்சு 2, (New RemingtonPortable and old Remington Portable) விற்பனைக்குண்டு. 15-8-65 தொடக்கம் 18-3-65 வரை விற்பனையாகும். விபரங்களுக்கு: பா. ஜெகநாதன், 18, செம்மணி ரோட், முத்திரைச்சந்தை, நல்லூர், யாழ்ப்பாணம் 1790

## அங்கத்தவர்கள் தேவை

தீவுப்பகுதி ஐக்கிய வைத்தியசாலைச் சங்கம், கரம்பொன், ஊர்காவற்றுறை. அங்கத்தவராய்ச் சேர்ந்துவிட்டவர்களா? பங்குகள் விநியோகிக்கப்படுகின்றன. செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். 1772

## கோட்டு விற்பனவு

### யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டில் தத்துவ வழக்கு இல. T 1015

யாழ்ப்பாணம் நல்லூர் காலஞ்சென்ற ஆறுமுகம் வேலுப்பிள்ளையின் சொத்தின் சம்பந்தமாக இறந்தவர்

யாழ்ப்பாணம் தற்போது இளவாலை பெரியவிளான் ஆறுமுகம் வேலுப்பிள்ளையின் கைம்பெண் கற்பகம்

விண்ணப்பிப்பவர்,

எதிராக

யாழ்ப்பாணம் நல்லூர் 15, செட்டித்தெரு

1. வேலுப்பிள்ளை நவரெத்தினராசா,
2. வேலுப்பிள்ளை பத்மநாதன்,
3. S இராசரெத்தினமும் மனைவி
4. கமலாம்பிகையும்,
5. வேலுப்பிள்ளை குலசிங்கம்.
6. வேலுப்பிள்ளை மகள் தனபாக்கியலெட்சுமி, 6-ம் உத்தரவாதி பராயமற்றவராகையால் இவரின் தத்துவகாரர் 1-ம் உத்தரவாதி.

இளவாலைபெரியவிளான்,

7. வேலுப்பிள்ளை மகள் தவமணிதேவி,
8. வேலுப்பிள்ளை சண்முகராசா,
9. வேலுப்பிள்ளை மகள் நகுலேஸ்வரி,
10. வேலுப்பிள்ளை மகள் யோகேஸ்வரி,
11. வேலுப்பிள்ளை மகள் தனலக்சுமி,
12. வேலுப்பிள்ளை மகள் புவனேஸ்வரி,
13. சந்தையா திருநாவுக்கரசு உத்தரவாதிகள்.

7 தொடக்கம் 12 வரையிலுமுள்ள உத்தரவாதிகள் பராயமற்றவர்களாகையால் இவர்களின் தத்துவகாரர் 13-ம் உத்தரவாதி.

இவ்வழக்கில் கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள பொருள்கள் 1965-ம் ஆண்டு ஏப்பிரல் (சித்திரை) மீ 17உ (17-4-65) சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கை 1-ம் இலக்க ஆதனத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### அட்டவணை

1. லொறி 22 ஸ்ரீ 1361
2. கார் B Y 5043
3. விருந்தை கதிரைகள் 11
4. சார்மனைக் கதிரைகள் 3
5. வட்டமேசை
6. கந்தோர் மேசை,
7. மேசைகள் 4,
8. அலுமாரிகள் 4,
9. பெட்டகம் 1,
10. இருவர் படுக்கக்கூடியசோடைக் கட்டில்கள் 3,
11. கண்ணாடியுடன் உடையணியும் மேசை,
12. றேடியோ,
13. சிங்கர் தையல்மெஷின்,
14. பித்தளைத் தட்டுகள் 5,
15. பித்தளை விளக்குகள் 2,
16. வெள்ளைப்பித்தளை விளக்குகள் 4,
17. கிடாரம் 1,
18. ஒற்றைமாட்டுக் கரத்தை,
19. மணிக்கூடுகள் 2,
20. பசு 1,
21. மேசை விசிறி,
22. இரும்புக்கதவு,
23. சாப்பாட்டு மேசைப் பாத்திரங்கள்.

வி. செ. குட்டிப்பிள்ளை, கோட் கொமிஷனர்.
"இராசகிரி"
643, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1674


## கைத்தறி சேலைகள்

80, 100, 120-ம் நம்பர் நூல்களில் எமது சொந்தத் தறிகளால் தேர்ச்சிபெற்றவர்களைக்கொண்டு டிசைன்கள் போட்டு தயார் செய்த சேலைகள் மலிவான விலைகளில் விற்பனைக்கிருக்கின்றன.

எஸ். ஆர். செல்லத்துரை
216, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 296.



வரி விளம்பரம்


## விற்பனைக்கு

எங்கள் தயாரிப்பிலுள்ள "டோர்ச்" மார்க் அலுமினியப் பாத்திரங்கள் குறைந்த விலையில் எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்வர்சில்வர் மாளிகை, 241, காங்கேசன் துறை வீதி. யாழ்ப்பாணம், 1745

காங்கேசன்துறை ஊராவின் எலுமிட்டத்தில், சிமெந்து தொழிற்சாலைக்கு கிழக்கு எல்லையிலும் காங்கேசன் துறை—கீரிமலை பிரதான வீதிக்கு அருகாமையிலும் 12 பரப்பு 6 குழி தோட்டக்காணி தனிக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. எஸ். கிருஷ்ணஐயர், 2, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் 1795

## கார்–அச்சுமெசின் விற்பனைக்கு

ஒரு பழைய ஒஸ்டின் 10, ஒரு டபிள் கிறவுன் சலிண்டர் மெசின் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. கலாபவன அச்சகம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1776

## "பெரும்பை உலகினுள்ளே" இருப்பதை அறியாது! தர்மசங்கடக் கலகங்களா?

எவராலும் நூலை அறிஞ: புண்ணியக் கல்வியும்–சமயமும்–சாரீக சீர்திருத்த–நல்லொழுக்கமும்–சத்தியமும் "சான்றோரும்" இல்லாத மக்கள் என்பதனை, மூலைக்குமூலை அசைப்பவர்கள் காட்டுகிறார்கள்!

"கருப்பையை" உதாரணமாக வைத்து:- மக்கட்பகையும் "தலைஉறுப்பும் அறிவுறுப்பும்" சில உறுப்புக்களும், ஒன்றையொன்று "முட்டாது" கட்டுப்படுதை அறியும் காலம் இன்னும் வரவில்லை!! (அறிவுக்காக அழுவாருமில்லை)

"ஓ உற்றுழி உதவியும்" என்ற "பொன் ஏட்டை" மொழிகளும்—சாதிகளும்—சமயங்களும்–ஆட்சியுகளும் அறியாது, மோதுவதேன்? இருள் அகலுமா!

"சான்றோர் உலகப்பையில்" தமிழர் பின்னணியா? முன்னணியா? "உரை கல் தேடாட்டும்!!! வீண் வீம்பு வேண்டா! "பாராளுமன்றங்களும்–லோகசபைகளும்" அறவைத் திங்களை இனியாவது அறிந்து நல்ல திசைகாட்டுமா? அழுது உலகில் "குண்டுசாலை" வெல்லும் பேறில்லை, 1000 முறை ஆராய்க; யோக்கியராவதே சத்தியம்! "அமுதை விரும்புவோர்: கஞ்சகளைத் தோடாதீர்." சன்மார்க்க தவகூடம், கந்தரோடை, யாழ்ப்பாணம். 1794

## தொய்வு, தீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். டாக்டர்கள், அரசியல் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றுலோக் இலவசம். தொய்வுக்கு 10 நாள் மருந்து. 12-50 தீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

ஆயுர்வேத வைத்தியர் பரிபூரணானந்தர் வைத்தியர் பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.




மைல் கணக்காக நடக்கவும், மணித்தியாலங்களாக நிற்கவும், மலர் இதழ் போன்ற, பஞ்சு மெத்தை சொகுசுள்ள **இலஸ்டோ** காலணிகள் அணியுங்கள்.

இலஸ்ட்டோ காலணிகள் அணிவதனுல் பாத எரிச்சலின்றி வெகு தூரம் நடக்கவும், பல மணித்தியாலங்கள் நிற்கவும் இயலுகிறது. சோர்வுற்ற பாதங்களுக்கு மலர் இதழ் போன்ற, பஞ்சு மெத்தை சொகுசுள்ள இலஸ்ட்டோ காலணிகள் பாதங்களுக்கு குளுமையும், சௌகரியத்தையும் அளிக்கின்றன. இலஸ்ட்டோ காலணிகளை கேட்டு வாங்குங்கள். காற்றைப்போல் கனக்குறைவான இலஸ்ட்டோ காலணிகள் வளையுந்தன்மையுடையவை, நீடிய பாவனைக்கு உத்தரவாதம் பெற்றவை.




இலஸ்டோ போம்ட்ரெக்ஸ்

## ...நாட்டு மக்களே...
(6-ம் பக்கத் தொடர்ச்சி)

குடியேற்றத் திட்டம் நான் பதவி வகித்த காலத்தில் கடந்த பட்டியலில் கடந்த ஒன்பது ஆண்டுகளில் தான் குடியேற்றம் அதிகரித்தது. சிங்களத் திணிப்பும் வலுவடைந்தது. இதற்குச் சமாதானம் ஏதும் கூறாமல் எல்லாத்திற்கும் நான்தான் காரணம் என்று மக்களை எவ்வளவு காலத்திற்கு ஏமாற்ற முடியும்?

எந்த அரசியல் கட்சி தேவையானது என்பதை தெரிவு செய்ய வேண்டிய தேர்தல் இது. தமிழரசுக் கட்சியினர் கூட்டரசாங்கத்தில் சேரவிருப்பமுடையவர்களாக இருப்பதை பத்திரிகைச் செய்திகளை மூலமாக அறிகின்றோம்.

தமிழ் மக்கள் கடந்த ஒன்பதாண்டுகளில் இழந்த உரிமைகளைப் பெற்றுத்தர தமிழ்க் காங்கிரஸ் ஒன்றினாலே தான் முடியும். வட்டமேசை மகாநாடு ஒன்றின் மூலம் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மூன்றாண்டுகாலத்தில் தமிழரின் மொழிப் பிரச்சினைக்கு தமிழ்க் காங்கிரஸ் தீர்வுகாணும்.

வவுனியா முன்னாள் எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் பேசுகையில்:

"தமிழனத்தை ஒன்று படுத்தி விட்டோம் என்பவர்கள் இன்று தமிழர்களைக் கூறு போடும் வகையில் நடந்து வருகிறார்கள் என்றார்.

"தடுப்புக்காவலில் வைக்கப்பட்டபோது மகாத்மா காந்தியைப் போல உண்ணாவிரதத்தை ஆரம்பிப்போம் என்று கூறியபோது தமிழரசுக் கட்சியினர் எனது யோசனையை நிராகரித்தனர்" என்று அவர் கூறினார்.

முன்னாள் யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராஜா, ஆலடி எம். எம். சுந்தரம், தமிழ் காங்கிரஸ் அபேட்சகர் திரு. க. ஸ்ரீபாஸ்கரன் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.


**REGAL — JAFFNA**
**NOW SHOWING**
PAUL NEWMAN
in M. G. M's
THE PRIZE
(Panavision - Metrocolor)


# "மொழி உரிமையை எம்மால் மீட்கமுடியும்"

வவுனியா, ஞாயிறு

கடந்த ஒன்பது வருட காலமாக வருடத்திற்கு வருடம் மாதத்திற்கு மாதம் நாளுக்கு நாளாக தமிழனின் மதிப்பு, மானம், மரியாதை-படிப்படியாகக் குறைந்து இன்று தமிழ் மக்கள் மொழியுரிமையற்று இரண்டாந்தரப் பிரஜையாக வாழுகின்றார்கள்" என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் வவுனியா நகரசபைத் திறந்த முற்றவெளி மைதானத்தில் வேட்பாளர் திரு. தா. சிவசிதம்பரத்தை ஆதரித்து நடத்தப்பட்ட கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறியதாவது: "எமது கட்சியில் இருந்து எரிச்சல் பொறாமை காரணமாக விலகி அவசரமாகக் கட்சியொன்றை உருவாக்கியவர்கள் முதல்-தமிழரசு என்றார்கள்.

இலங்கை முழுப்பகுதியிலும் உரிமையோடு சிங்களவருடன் சாமானமாக இன்னும் கூடிய நிலையிலும், வாழ்ந்த எமது சாதியை அதன் மதிப்பை இனி எவ்வளவு சிரமப்பட்டு நிலைநாட்ட வேண்டும் தெரியுமா?

திரு. சேர் பொன் இராமநாதன் கண்டமுறையின் கம் கண்ணியமான முறையில் கட்டியெழுப்பிய கோட்டையைத் தகர்த்தவர் யார்?

"மொழி, மொழி" என்று கத்திவிட்டு நானும் எனது கட்சியும் இலங்கை முழுதுமே தமிழுக்கு சமஅந்தஸ்து இருக்க வேண்டுமென்று வாதாட தமிழரசுக்கட்சியினர் இலங்கை முழுவதும் தனிச் சிங்களம் என்ற சட்டத்தின் கீழ் எமது தமிழ்ப்பகுதியில் நியாயமான அளவு தமிழுக்கு ஒத்துப் பேரம் கைச்சாத்து இட்டதை நீங்கள் அறிவீர்கள். எமது மொழி உரிமையை எம்மால் நம்பிக்கையாக மீட்க முடியும் என்று கூறுகின்றோம்.

"பிரதேசம் பறி போகிறது" என்று கூறினால் எமது உரிமைகள் நிலையாக நிற்குமா? நானும் எனது கட்சியும்பெரும்பான்மையாக இருந்த காலத்தில் சிங்களவரைக் கொண்டு வந்து எமது தமிழ்ப்பிரதேசத்தில் குடியேற்ற மனதால்கூட நினைக்க முடியாத அரசினர் எட்டுவருட காலமாக விருப்புடன் ஆயிரமாக குடியேற்றப்பட்டார்கள். இதனால் எமது குடியுரிமை பறிக்கப்பட்டது.

சமஇஷ்டம் உள்ள இடத்தில்தான் சமஷ்டி எடுக்கலாம். இங்கு சமமும் இல்லை, இஷ்டமும் இல்லை, நல்லெண்ணமும் இல்லை. 157 பேர் கொண்ட பாராளுமன்றத்தில் 25—30 பேர்தானும் ஓர் அணியாக நின்று சமஷ்டியை எப்படி எடுப்பது? கறுப்புக் கொடியை அட்டர்த்தியாகப் பிடித்தால் சமஷ்டி கிடைக்குமா? இழந்த உரிமைகளை இரண்டு மூன்று வருடத்திற்குள் பெற்றுத்தர எமது கட்சிக்கு முடியும்.

திரு. பொன்னம்பலம் ஓமந்தை, செட்டிகுளம் ஆகிய இடங்களிலும் பேசினார். இக்கூட்டத்திற்கு திரு நகராண்மைத் தலைவர் திரு. எம். பொன்னையா தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் கிளிநொச்சி வேட்பாளர் திரு. வே. குமாரசாமி, உடுப்பிட்டி வேட்பாளர், திரு. மு. சிவசிதம்பரம் திரு. க. பாஸ்கரன், திரு. என். சிவனேசன் உட்படப் பலர் பேசினர்.

## திருமண அழைப்பு
### கணேசன்–தங்கம்மா

மணமகன்: திரு. க. கணேசன் அவர்கள் (விகிதர், இலாப நிதிச் சங்கம், வழுக்கம்பரை, பென்சனர் திரு. சுப்பையாவின் புதல்வன், சுழிபுரம்) மணமகள் திருநிறை செல்வி தங்கம்மா (ஆசிரியை அமெரிக்கன் மிஷன் பாடசாலை பினவத்தை சிந்தங்கேணி) சுழிபுரம் பொ. கிருஷ்ணரின் புதல்வி. முகூர்த்தம் குரோதி வருடம் பங்குனி மாதம் 4-ம் திகதி (17-3-65) புதன்கிழமை பகல் 11 மணியளவில் சுழிபுரம் வள்ளியம்மன் கோவிலில் நடைபெறும். இதையே அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளவும். தனிப்பட்ட அழைப்புகள் இல்லை. 1792

## "கஷ்டமின்றி உரிமை கிடைக்கும்"


வல்வெட்டித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை தொகுதி ஐக்கிய இடதுசாரி அபேட்சகர் கே. மோதிலால் நேருவை ஆதரித்து பொலிகண்டி சந்திக்கருகாமையிலுள்ள மைதானத்தில் உடுப்பிட்டி கிராம சபை அங்கத்தவர் சேர. சிவராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உடுப்பிட்டி அபேட்சகர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் பேசுகையில் கூட்டரசாங்கம் ஆட்சிக்காலத்தில் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கத் தன்னாலானவரை முயற்சி செய்துவந்ததென்றும் அதன் முன்பே கூட்டரசாங்கம் வீழ்த்தப்பட்டதென்றும் கூறினார்.

பருத்தித்துறை அபேட்சகர் திரு. கே. மோதிலால் நேரு பேசுகையில் தமிழ்பேசும் மக்கள் எந்தவிதமான கஷ்டங்களும் அனுபவியாமல் மொழி உரிமையைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய ஆற்றல் நமது கட்சிக்கு இருக்கிறதென்றார்.

திரு. எஸ். ஜெயசிங்கம் பேசுகையில் கூட்டரசாங்கம் பதவியேற்ற சொற்ப நாட்களுக்குள் ஏழைமக்கள் எவ்வளவோ உரிமையைப் பெற்றுக்கொண்டனர் என்றார்.


2- வது மாதம்
கிங்ஸ்லி
(கொழும்பு)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-30,
பிளாசா
(வெள்ளவத்தை)
வெம்பிளி
(கண்டி)



ஜெமினி கணேசன்
சாவித்திரி
மற்றும் பலர் நடிக்கும்
கற்பகம்


# சாதி ஒழிப்புக் குழு முயற்சியில் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

தீண்டாமை ஒழிப்புச் சம்பந்தமாக சாதி ஒழிப்புக்குழு எடுத்துவந்துள்ள நடவடிக்கை பெரும் வெற்றியை அளிக்கும் நிலையை அடைந்துள்ளது. மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவில் உட்படப் பல பிரசித்திபெற்ற ஆலயங்களை விரைவில் திறந்துவைப்பதற்கான ஆரம்ப முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

காங்கேசன்துறை முன்னாள் எம். பி.யும் தமிழரசுக்கட்சித் தலைவருமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மாவிட்டபுரம் ஆலயத்தைப் பொறுத்தவரையில் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக விருப்பம் தெரிவித்தால் ஆலயப் பிரவேசத்திற்கான முயற்சிகளுக்குத் தடையிருக்காது என ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ க. துரைசாமிக் குருக்கள் தம்மிடம் கூறியதாக சாதி ஒழிப்புக் குழு உபதலைவர் திரு டி. எஸ். துரைராஜா யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சில பிரமுகர்களுடன் தாம் நடத்திய பேச்சுக்களும் வெற்றியளித்துள்ளன என்றும் இது விஷயமாக திரு. செல்வநாயகம் உடன் நடவடிக்கை எடுப்பது சிறுபான்மைத்தமிழ் மக்களுக்குச் செய்யும் பேருதவியாகவிருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

சாதிஒழிப்புக்குழுவின் முயற்சிக்கு ஆதரவான நிலையை ஏற்படுத்தும் பொருட்டு இவ்வாரத்தில் ஆலய ஆதீன கர்த்தாவையும் திரு. செல்வநாயகத்தையும் தூதுக்குழு ஒன்று சந்திக்கவிருக்கின்றது.

## "பேரம்பேசி தீர்க்க முடியாது"

ஊர்காவற்றுறை, ஞாயிறு

"தீவுப்பகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு ஏ. எம். தம்பையா காலத்தில் தீவுப்பகுதியில் பெரும் அபிவிருத்திகள் நடைபெற்றன. தமிழரசுக்கட்சி உறுப்பினர் பாராளுமன்றம் அனுப்பப்பட்டதற்குப் பின் தீவுபபகுதி எந்த வகையில் முன்னேற்றமடைந்துள்ளது?"

ஊர்காவற்றுறை தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு. என். சி. சிவஞானத்தை ஆதரித்து கரம்பனில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய அட்வக்கேட் திரு. சரவணமுத்து மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

டாக்டர் திரு. வி. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சரவணமுத்து மேலும் பேசியதாவது:

"1960-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்பின் ஐக்கிய தேசியக்கட்சியுடன் சமஷ்டிக்கட்சியினர் சேர்ந்து ஒத்துழைப்பது தமிழ்பேசும் மக்களுக்கு நல்லது" என நமது தலைவர் ஜி ஜி கூறியதைக் கேட்காமல் அடி உதைபடுவதற்கு காரணமாய் இருந்த கட்சியை ஆதரித்தார்கள். மலைநாட்டில் அவர்களை வெற்றிபெறச் செய்தார்கள். இதனால் இன்று ஜனநாயகமும் மறைந்து சர்வாதிகாரம் தலைப்படக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. வவுனியா அபேட்சகர் திரு. சிவசிதம்பரம் பேசியபின், ஊர்காவற்றுறை அபேட்சகர் திரு. சிவஞானம் பேசுகையில் ஜனநாயக நாட்டிலே ஒரு குறிப்பிட்ட கொள்கைகளை வைத்துவெற்றி பெற்ற கட்சியினர் அந்தக் கொள்கையில் வெற்றிபெறத் தவறினால், இன்னொருகட்சியை மக்கள் மாற்றி அனுப்புவது இயல்பு என்றார்.

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில், மொழிப்பிரச்சினை ஒரு தேசிய பிரச்சினையென்றும் இரண்டு கட்சிகள் பேரம்பேசி இதனைத் தீர்க்க முடியாதென்றும் கட்சிக்கு அப்பாற்பட்ட விஷயமாகக் கொண்டு சர்வகட்சி மகாநாடு மூலமே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வழியுண்டு என்றும் கூறினார்.

செல்வன் எம். பி. மகேந்திரன், திரு. எஸ். எம். செல்வராசா, திரு. கே. கைலாசபிள்ளை, திரு. க. பொன்னுச்சாமி உட்பட வேறுசிலரும் பேசினர்.

## 'ஈழகேசரி' பொன்னையா ஞாபகார்த்த விழா

குரும்பசிட்டி, ஞாயிறு

குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் அடுத்த மாதம் 3-ம் திகதி நடைபெறவிருக்கும் ஈழகேசரி பொன்னையா ஞாபகார்த்த விழாவில், பேச்சுப் போட்டி, மகேசுர பூசை, நூல் வெளியீடு, கலை நிகழ்ச்சிகள் ஆகியவை முக்கிய இடம் பெறும். பேச்சுப் போட்டியில் பங்குகொள்ள புத்தளம், நீர்கொழும்பு, மன்னார், திருக்கோணமலை முதலிய இடங்களிலிருந்து பல மாணவர்கள் வருவார்கள் என அறிவிக்கப்படுகிறது. போட்டியில் 8 தங்கப்பதக்கங்கள் உட்பட பல பரிசுகள் வழங்கப்பட இருக்கின்றன.

## தேர்தல் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறைத் தொகுதியில் மட்டும் ஒரு நாளில் 14 தேர்தல் பிரசாரக் கூட்டங்களை தமிழரசுக் கட்சி நடத்தியிருக்கின்றது. நேற்று மட்டும் காலை முதல் பருத்தித்துறை தொகுதியின் ஒவ்வொரு பகுதிகளிலும் தேர்தல் பிரசாரக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதனைவிட தமிழ்க் காங்கிரஸ், ஐக்கிய இடதுசாரி முன்னணிக்கூட்டங்களும் நடைபெற்றன.

தற்போது எல்லாக் கட்சிகளினதும் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் வடபகுதியைப் பொறுத்தவரை தினசரி 50 நடைபெறுகின்றன.

## "ஐக்கியக் கருவியாக ஹிந்தி இருக்கவேண்டும்"

புதுடில்லி, மார்ச் 14

"மக்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தக்கூடிய கருவியாகவே ஹிந்தியைப் பயன்படுத்தவேண்டுமே தவிர, பிளவுபடுத்தும் கருவியாக அதனைப் பயன்படுத்தக் கூடாது" என்று ஹிந்திபேசும் மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் பிரதமர் சாஸ்திரி கேட்டுள்ளார்.

அரசாங்க

## தட்டெழுத்தாளர் உயர்பிரிவு பரீட்சை

பம்பலப்பிட்டி, சனி

1963-ம் வருடம் டிசம்பர் முதல் திகதிவரை ஐந்து வருடச் சேவை புரிந்த அரசாங்க தட்டெழுத்தாளர்கள் உயர்பிரிவுக்கு உயர்த்தப்படுவதற்கான தகுதிப் பரீட்சை இந்த வருடம் மே மாதம் 8, 23, 29-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. இதற்கான விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான இறுதித்திகதி ஏப்ரல் 1-ம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ...யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 55-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.